1997 ஏப்ரல் 9]
485—

புயல் பாதுகாப்பு மையம் கட்டுதல்

***4236—திரு. எஸ்.கே. வேதரத்தினம் :**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடற்கரையோரங்களில் எல்லாக் கிராமங்களிலும் புயல் பாதுகாப்பு மையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் கடற்கரையோரக் கிராமங்களில் சுமார் 123 புயல் பாதுகாப்பு மையங்கள் ஏற்கெனவே பல்வேறு நிதி நிறுவனங்களின் உதவியுடன் கட்டப்பட்டுள்ளன. தற்போது மேலும் 120 இடங்களில் புயல் பாதுகாப்பு மையங்கள் கட்டலாம் என முடிவு செய்யப்பட்டு நிதியுதவி அளிக்கும் வெளிநாட்டு நிறுவனம் பற்றி மைய அரசுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது. வெளிநாட்டு நிறுவனத்தாரிடமிருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன் புயல் பாதுகாப்பு மையக் கட்டுமானப்பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரக் கிராமங்கள் இயற்கைச் சீற்றத்தால் அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. எனது வேதாரண்யம் தொகுதி சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு மக்களெல்லாம் பெரும் அவதிக்குள்ளானார்கள். அது மட்டுமல்லாமல் எனது வேதாரண்யம் தொகுதி இரண்டு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களே 120 புயல் பாதுகாப்பு மையங்கள் கட்டப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே எனது தொகுதிக்குக் கூடுதலாக புயல் பாதுகாப்பு மையங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேதரத்தினம் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 486, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.